கட்டுரை 03 · ARTICLE 03 | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அற இலக்கியமும்

# பத்துப்பாட்டில் தகவல் தொடர்பு

*Communication in Pattuppattu*

**முனைவர் செ. யோகம்**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்

***Dr. S. Yogam**, Assistant Professor of Tamil, Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar*
**மின்னஞ்சல்:** yogam@vvvcollege.org

**பக்கங்கள்:** 16–21

## ஆய்வுச் சுருக்கம்

மனித நேயம் தோன்றிய போதே தகவல் தொடர்பு தோன்றிவிட்டது. தகவல் தொடர்பு என்பது கருத்துக்கள், உணர்வுகள் மற்றும் செய்திகளை ஒருவர் அல்லது ஒரு குழுவிடமிருந்து மற்றொருவருக்கு வெளிப்படுத்தும் பரிமாறும் செயலாகும். உலகின் எந்த இடத்திற்கும் அதிகபட்சம் ஒரு நிமிடத்திற்குள் இன்று தகவல்கள் சென்றடையும் அதி வேக தொழில் நுட்ப வளர்ச்சியில் இருக்கிறோம். ஆனால் அறிவியல் வளர்ச்சி இல்லாத பழங்காலத்தில் பண்டைத் தமிழர்கள் எவ்வாறெல்லாம் தகவல் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ‘பத்துப்பாட்டில்’ பழந்தமிழர்கள் கொண்டிருந்த தகவல் தொடர்பு முறைகளை ஆயும் விதமாக ‘பத்துப்பாட்டில்’ தகவல் தொடர்பு என்னும் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** தகவல் தொடர்பு; பத்துப்பாட்டு; ஆற்றுப்படை; ஒலிக்கருவிகள்

### Abstract

Communication emerged alongside humanity itself. It is the process of conveying and sharing ideas, emotions, and messages from one individual or group to another. Today, we live in an era of rapid technological advancement where information can reach any corner of the world within a minute. However, Sangam literature records how ancient Tamils effectively communicated in early times without modern scientific technology. This research paper, titled "Communication in Pattuppattu" (Ten Idylls), analyzes the various communication methods utilized by ancient Tamils as depicted in the Pattuppattu anthology.

**Keywords:** Communication Methods; Sangam Literature; Pattuppattu; Ancient Tamils; Information Exchange

## முகவுரை

உலகின் எந்த இடத்தில் இருந்தாலும் ஒருவரிடமிருந்து தகவல் அடுத்தவருக்கு அதிகபட்சம் ஒரு நிமிடத்தில் சென்று சேரும் அதிவேக தகவல்தொடர்பு தொழில்நுட்ப காலத்தில் மனித குலம் இன்று இருக்கிறது. மொழி என்ற ஒன்று தோன்றுவதற்கு முன் ஓசையாலும், சைகையாலும் நெருப்பை உண்டாக்கியும், ஓவியம் வரைந்தும் தனது தகவலை மனிதன் அடுத்தவர்களுக்கு உணர்த்திக் கொண்டிருந்தான். எழுத்து கண்டுபிடிக்கப்பட்ட பின் பறையறைந்தும், புறாவின் காலில் செய்தியை வரைந்தோ, எழுதியோ அனுப்பிவிட்டும் தகவல்கள் பரப்பப்பட்டன. இயற்கை காட்டிய வழியினைப் பின்பற்றி மனிதன் அறிவியலின் துணையோடு பல்வேறு வழிகளில் தகவல் தொடர்பினைப் பயன்படுத்துகிறான். அறிவியல் சார்ந்த வாழ்க்கைக்கு மட்டுமல்லாது எளிமையான வாழ்க்கைக்கும் தகவல் தொடர்பு அடிப்படையாகும். தகவல் என்றால்

‘பிறர் அறியும் வகையில் வெளிப்படுத்தப்படும் செய்தி’ என்று பொருளாகும். தொடர்பு என்றால் ‘இணைப்பு’ அதாவது இரு இடங்களை இணைப்பது என்பது பொருளாகும்.

சங்க இலக்கியம் பண்டைத் தமிழ் மக்கள் தகவல் தொடர்பு கொண்ட விதங்களைப் பதிவு செய்துள்ளது. பத்துப்பாட்டில் பண்டைத் தமிழ் மக்களின் தகவல் தொடர்பு முறைகள் குறித்துக் காண்போம்.

## ஆற்றுப்படை நூல்களில் தகவல் தொடர்பு

பத்துப்பாட்டில் உள்ள ஐந்து ஆற்றுப்படை நூல்களாகிய திருமுருக்காற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகியவை சிறந்த தகவல் பரிமாற்ற ஊடகமாகத் திகழ்கின்றன. அரசனிடமோ அல்லது வள்ளலிடமோ சென்று பரிசு பெற்றுத் திரும்பும் பாணர், கூத்தர், விறலியர் மற்றும் புலவர் வறுமையில் வாடும் சக கலைஞர்களைச் சந்தித்து ‘இந்த அரசனிடம் அல்லது வள்ளலிடம் சென்றால் உனது வறுமை நீங்கும்’ என்ற தகவலைக் கூறி வழிப்படுத்துகின்றனர். பொருநராற்றுப் படையில் பரிசில் பெற்று வந்த பொருநன், வறுமையில் வாடிய பொருநனைப் பார்த்து,

“பழுமரம் உள்ளிய பறவையின் யானும் அவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்
இசையேன் புக்கு, என் இடும்பை தீர
……………………………………
கைக்கசடு இருந்த என்கண் அகன் தடாரி
இருசீர்ப் பாணிக்கு ஏற்ப விரிகதிர்”

(பொ: 64 – 71)

வறுமையில் வாடிய நான் எப்பொழுதும் அடையாத வாசல் உடைய கரிகாற்பெருவளத்தானின் அரண்மனை வாயில் சென்று எனது தடாரிப் பறையை இயக்கி இரண்டு சீர்களை உடைய பாட்டுப் பாடினேன். மன்னன் என்னை வந்து அழைத்துச் சென்று எனக்கு உணவு கொடுத்து என் வறுமை நீங்க செல்வங்களை வாரி வழங்கினான். எனவே நீயும் அவனிடம் சென்றால் உன் வறுமை ஒழியும் என்று சொல்கிறான்.

சிறுபாணாற்றுப்படையில் பரிசில் பெற்று வந்த எல்லா இடங்களைப் பற்றிய தகவல்களையும் வறுமையில் இருக்கும் பாணனிடம் சொல்கிறான். சேரனின் தலைநகர் வஞ்சிமா நகரில் கிடைக்கும் பரிசு குறைவானது தான் முத்தும், முத்தமிழும் நிலை பெற்ற மதுரைக்கும் சென்றாலும் அங்கு உனக்குக் கிடைக்கும் பரிசு குறைவு தான் என்பதை,

“தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே..........”

(சி: 66 – 67)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. உறந்தைக்குச் சென்றாலும் கிடைக்கும் பரிசு குறைவு தான். எனவே நீ நல்லியக் கோடனிடம் சென்றால் அதிகமான பரிசில்களைப் பெறலாம் என்ற தகவலைச் சொல்கிறான். யாரைச் சந்தித்தால் அதிகமான பொருள் பெறலாம் என்ற தகவல் வறுமையில் இருக்கும் பாணனுக்குக் கிடைக்கிறது.

“நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்காரு மரபின் தன்னும் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாள் சென்றன மாக”

(சி: 126 – 129)

“,............................ நீயிரும்
இவண் நயந் திருந்த இரும்பேர் ஒக்கல்
செம்மல் உள்ளமொடு செல்குவி ராயின்”

(சி: 143 – 145)

எனவே உன் சுற்றத்தினரோடு அவனிடம் செல்லலாம், என்ற தகவலைப் பாணன் சொல்கிறான்.

பெரும்பாணாற்றுப் படையிலும் பரிசில் பெற்று வந்த பாணன் வறுமையில் இருக்கும் பாணனிடம் இளந்திரையனிடம் சென்றால் அதிகமான பரிசில் பெறலாம் என்ற தகவலைத் தெரிவிக்கிறான். மேலும் அவனைப் பார்க்கச் செல்லும் வழியில் எங்கெங்கும் தங்கலாம் மற்றும் எங்கெங்கு உணவு கிடைக்கும் என்ற தகவலையும் பகிர்கின்றான்.

“தோள் தாழ் குளத்த கோடு காத்திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பில்”

(பெ : 273 – 274)

“வல்வாய்ச் சாடியின் வழைச் சுஅற விளைந்த
வெந்நீர் அரியல் விரல் அலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவீர்”

(பெ: 280 – 282)

மேற்காணும் பாடலடிகள் பாணன் செல்லும் வழியில் எங்கு தங்கலாம் என்றும் என்ன உணவு கிடைக்கும் என்ற தகவலையும் கொடுக்கிறது.

கூத்தராற்றுப்படையில் மலையின் மேல் சென்று நன்னன் சேய் நன்னனிடம் பரிசில் பெற்று வந்த கூத்தன், மன்னனைக் காணச் செல்லவிருக்கும் கூத்தர் கூட்டத்திடம் மன்னனின் சிறப்பு காணச் செல்லும் வழித் தடங்களின் நிலை, ஆங்காங்கே உள்ள ஊர்களில் கிடைக்கும் உணவுகள் குறித்த அனைத்துத் தகவல்களையும் கொடுக்கிறான் மேலும் மலையின் வழியாகச் செல்லும் போது சந்திக்கக் கூடிய துன்பங்களையும் அதைத் தவிர்க்க என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற அரிய தகவல்களையும் தருகிறான். மலை மிகவும் அச்சத்தைத் தருவது எனவே நிலப்பகுதி வழியே நடந்து செல்லுங்கள்.

“விளைபுனம் நிழத்தலின் கேழல் அஞ்சிப்
புழைதொறும் மாட்டிய இருங்கல் அரும்பொறி
உடைய ஆறே நள்ளிருள் அலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமின்”

(கூ : 193 – 196)

தினைப்புனத்தை அழிப்பதற்குப் பன்றிகள் வரும் வழியில் பொறியை வைத்திருப்பர். எனவே விடிந்த பின் செல்லுங்கள் என்ற தகவலைத் தருகிறான். மேலும் ஆழமான குளங்கள் இருக்கும் அதனுள் வழுக்கும் நீர்ப்பாசி இருக்கும். அதைக் கடக்க சிறு மூங்கில்களுடன் பஞ்சாய் கோரையின் மென்மையான கம்புகளைப் பிடித்துக் கொண்டு செல்லுங்கள் என்கின்ற தகவலையும் கொடுக்கிறான். அவர்கள் கொண்டு செல்லும் இசைக்கருவிகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டுமெனச் சொல்கிறான். அது

மட்டுமல்லாமல் காட்டுவழியில் சென்று திரும்பி வரும் போது பாதை மறக்காமல் இருப்பதற்காகச் சந்திகளில் புல்லைக் கையால் துடைத்து முடிபோட்டுச் செல்லுங்கள் என்றும் சொல்கிறான். இதை,

> “பண்டுநற்கு அறியாப் புலம்பெயர் புதுவிர்
> சந்து நீவிப் புல்முடிந்த இடுமின்”
>
> (கூ : 392 – 393)

என்னும் இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

## ஒலிக்குறிப்புகள்

தொலைதூரத்திற்கான தகவல்களை அனுப்ப ஒலிகள் பயன்படுத்தப்பட்டன. நாட்டின் முக்கிய அறிவிப்புகள், விழாக்கள், போர்க்கால எச்சரிக்கை போன்றவற்றிற்கு முரசு கொட்டி தகவலை அறிவித்தனர். வழிபாட்டுத் தலங்களிலும் போர்க்களங்களிலும் செய்திகளைத் தெரிவிக்க சங்கு மற்றும் கொம்புகள் ஊதப்பட்டன. திருமுருகாற்றுப்படையில் தெய்வம் ஏறுகின்ற கோவலன் கொம்பு, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளை வாசிக்கிறான்.

> “கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
> சூழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்”
>
> (தி : 208 – 209)

எனத் திருமுருகாற்றுப்படை காட்டுகிறது. தினைக் கதிர்கள் நன்கு விளைந்திருப்பதைத் தின்னக் கிளிகள் வருகின்றன.

அவற்றை,

> “தழலும் தட்டையும் குளிறும் பிறவும்
> களிகடி மரபின் ஊழ்ஊழ் வாங்கி’
>
> (கு: 43 – 44)

தழல், தட்டை, குளிறு என்னும் ஒசை எழுப்பும் கருவிகளைக் கொண்டு கிளிகளை ஓட்டிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. கூத்தராற்றுப்படையில் மலையில் விலங்குகள் ஏற்படுத்தும் ஒலியும் கானவர்கள் உண்டாக்கும் ஒலியும், மகளிர் கிளிகளை விரட்ட வாயாலும் தட்டையாலும் ஏற்படுத்தும் ஒலியும் காளைப்போரால் ஏற்படும் ஓசையும் கொடுக்கும் தகவல்களை உணர்ந்து பயணம் செய்ய வேண்டும்.

> “உரவுச்சினந் தணித்துப் பெருவெளியில் பிணிமார்
> விரவுமொழி பயிற்றும் பாகர் ஓதை
> ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
> கிளிகடி மகளிர் விளிபடு புகல்”
>
> (கூ : 326 – 329)

எவற்றிற்கெல்லாம் ஒலிகள் மூலம் தகவல் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

## காட்சி தகவல் தொடர்பு

கடலில் செல்லும் மரக்கலங்கள் வழிதவறிச் செல்லாமல் இருக்கக் கலங்கரை விளக்கங்கள் இருந்தன. நீர்ப்பெயற்று என்னும் துறைமுகத்தில் உள்ள கலங்கரை விளக்கம் ஏணிசாத்தியும் ஏற முடியாத உயரம் கொண்டது கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு வழிகாட்ட இதன் மேல் இரவில் தீ மூட்டுவர் என்ற செய்தியை

“ஏணி சாத்திய ஏற்று செய்தியை
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறைபிறக்கு ஒழியப் போகி”

(பெ: 347 – 351)

இப்பாடலடிகள் பதிவு செய்கின்றன.

கதைத் தெருக்களில் இருக்கும் கடைகளை உணர்த்த பல வண்ணக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பண்டங்கள் விற்கும் கடை, மீன், இறைச்சி விற்கும் கடைகள், கள்ளுக் கடைகள் போன்றவற்றில் பல வண்ணங்களில் கொடிகள் அசைந்து கொண்டிருந்தன என்பதை,

“மீன் தடிந்து விடக்கு அறுத்து
ஊன்று பொரிக்கும் ஒலிமுன்றில்
மணற்குவைஇ மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதலின்
நறவு நொடைக் கொடியோடு
---------------------
பல்வேறு உருவின் பதாகை நீழல்”

(ப :176 – 182)

இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

## வாய்மொழித் தகவல் தொடர்பு

புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள், பொருநர்கள் போன்றோர்கள் அந்தந்த நில மக்களின் நிலை, அரசர்களின் வீரம், கொடைத்திறன் போன்றவற்றை ஊர் ஊராகச் சென்று பாடினர். இதன் மூலம் அவர்களின் சிறப்புக்களை அடுத்ததடுத்த இடங்களுக்குக் கொண்டு சேர்க்கும் நடமாடும் ஊடகங்களாகத் திகழ்ந்தனர்.

“இருநிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோன் உம்பல்
------------------------------
முரசு முழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக்கூறும்
வலம்புரி அன்ன வசைநீங்கு சிறப்பின்”

(பெ : 30 – 35)

பரிசில் பெற்ற பாணன் இளந்திரையனின் சிறப்பை மற்றொரு பாணனிடம் பாடுகின்றான். இவ்வாறாக வாய்மொழித் தகவல் தொடர்பு பண்டை காலத்தில் மிகுந்திருந்தது.

## தொகுப்புரை

மனித குலம் தோன்றிய பொழுதே தகவல் தொடர்பும் தோன்றிவிட்டது. பண்டைய காலத்தில் நவீன சாதனங்கள் இல்லாத போதும் விளக்கத்தக்க முறையில் தகவல் தொடர்பு வழிகளைக் கையாண்டுள்ளனர். பத்துப்பாட்டில் நெறிப்படுத்துதல், ஒலிக் குறிப்புக் கொடுத்தல், காட்சித் தகவல் தொடர்பு முறை, வாய்மொழித் தகவல் தொடர்பு போன்ற தகவல் தொடர்புகள் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டதை அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. அறிஞர் ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், (2010) மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. முனைவர் ச.ஈஸ்வரன், தகவல் தொடர்புகளும் நெறிமுறைகளும், கௌரா புத்தக மையம், திருச்சி.